www.Padasalai.Net

தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்குநரின் செயல்முறைகள், சென்னை-6

ந.க.எண். 9839/ டி1 /2024, நாள். 07 .05. 2024

பொருள் : தொடக்கக் கல்வி – பொது மாறுதல் – 2024 – 2025 ஆம் ஆண்டிற்கான ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் பொது மாறுதல் கலந்தாய்வு – அரசளவில் ஆணைகள் பெறப்பட்டமை – தொடர் நடவடிக்கை மேற்கொள்ளல் – சார்ந்து.

பார்வை : அரசுக் கடிதம் எண் 3835/பக5(1)/2024–1 பள்ளிக் கல்வித் துறை நாள் 29.04.2024.

பார்வை காண் கடிதத்தில் 2024 – 2025 ஆம் கல்வி ஆண்டில் தொடக்கக் கல்வி இயக்கக நிர்வாகத்தின் கீழ் செயல்படும் ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி / அரசு தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் பணிபுரிந்து வரும் தலைமை ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு பணி நிரவல், பொது மாறுதல் கலந்தாய்விற்கான உத்தேச கலந்தாய்வு கால அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்காண் அரசுக் கடிதத்தில் தெரிவித்துள்ள உத்தேச கலந்தாய்வு கால அட்டவணையில் உள்ளவாறு பணி நிரவல், பொது மாறுதல் கலந்தாய்வினை சிறப்புற நடத்திடவும், உரிய முன்னேற்பாடுகள் செய்திடவும் அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், பார்வையில் காணும் 2024–2025 ஆம் ஆண்டிற்கான பணிநிரவல், பொதுமாறுதல் கலந்தாய்விற்கான உத்தேச கலந்தாய்வு கால அட்டவணையினை தங்கள் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரக் கல்வி அலுவலர்களுக்கும் உடன் சார்பு செய்து, அனைத்து ஆசிரியர்களும் அறியும் வகையில் வட்டாரக் கல்வி அலுவலகத்தில் உள்ள அறிவிப்புப் பலகையில் ஒட்டி வைத்திடத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

2024–2025 ஆம் ஆண்டிற்கான பணிநிரவல், பொதுமாறுதல் கலந்தாய்வு தொடர்பான விண்ணப்பங்கள் கல்வி மேலாண்மை தகவல் முறைமையில் பதிவேற்றம் செய்வது சார்ந்து தகவல் பின்னர் தெரிவிக்கப்படும் என அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கும் (தொடக்கக் கல்வி) தெரிவிக்கலாகிறது.

இணைப்பு :

பார்வை காண் அரசுக் கடிதம்

தொடக்கக் கல்வி இயக்குநர்

07/7.5.24

பெறுநர் :

அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி)

www.Padasalai.Net

பள்ளிக் கல்வித் துறை,

தலைமைச் செயலகம்,

சென்னை – 9.

கடித எண்.3835/பக.5(1)/2024-1, நாள். 29.04.2024.

அனுப்புநர்

திரு.ஜெ.குமரகுருபரன்,இ.ஆ.ப.,

அரசு செயலாளர்

009839

பெறுநர்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-6.

✓ தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை-6.

ஐயா,

பொருள் : பள்ளிக் கல்வி – பொது மாறுதல் கலந்தாய்வு அரசாணை வெளியிடப்பட்டமை – 2024-25 ஆம் ஆண்டுக்கான பொது மாறுதல் கலந்தாய்வு – மே 2024 மாதம் தொடங்கி நடத்திட அனுமதி வழங்கக் கோருதல் - தொடர்பாக.

தொடக்கக் கல்வி இயக்குநரகம் 06 MAY 2024 சென்னை

பார்வை 1 அரசாணை (நிலை) எண். 176, பள்ளிக் கல்வி (பக5(1))த்துறை, நாள். 17.12.2021

2 அரசாணை (நிலை) எண். 12, பள்ளிக் கல்வி (பக5(1))த்துறை, நாள். 03.02.2022

3 அரசாணை (நிலை) எண். 15, பள்ளிக் கல்வி (பக5(1))த்துறை, நாள். 10.02.2022

4 அரசாணை (நிலை) எண். 94, பள்ளிக் கல்வி (பக5(1))த்துறை, நாள். 24.06.2023

5 அரசாணை (நிலை) எண்.26, பள்ளிக் கல்வித் பக5(1)த்துறை, நாள் 24.01.2024

6 அரசாணை (நிலை) எண்.48, பள்ளிக் கல்வித் பக5(1)த்துறை, நாள் 21.02.2024

7 பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதம் ந.க.எண். 17929/அ1/இ4/2023, நாள் 25.04.2024

----------

மேலே 7இல் படிக்கப்பட்ட பள்ளிக் கல்வி இயக்குநரின் 25.04.2024 நாளிட்ட கடிதத்தில், மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், ஊராட்சி ஒன்றிய / நகராட்சி/ அரசுதொடக்க / நடுநிலைப்பள்ளிகள் மற்றும் அரசு / நகராட்சி, உயர்/ மேல்நிலைப்பள்ளிகளில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல் குறித்து நெறிமுறைகள் வகுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது என்றும், மேலும் அவ்வரசாணையின் பத்தி 7 (1) (b)யில் கீழ்க்காணுமாறு ஆணையிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

www.Padasalai.Net

7 (1) GENERAL CONDITIONS

(b) The counselling shall be done either during the month of May or at the end of the first or second term. No transfer counselling will be done during academic sessions. In case of counselling in the month of May, the places of the teachers due for retirement in the month of May shall also be shown as vacancies. Those who are due for retirement in the month of May, shall be eligible to take one of the existing vacancies alone and not a notional vacancy as on the date of counselling, in case of promotion. The post in which a teacher is on unauthorised absence for more than one month, will be treated as vacant and made available for counselling.

மேலும், 2022-23 ஆம் ஆண்டிற்கான பொதுமாறுதல் / பணிநிரவல் கலந்தாய்வுகள் 04.03.2023 முதல் 16.04.2023 வரையிலான தேதிகளிலும், 2023-2024 ஆம் ஆண்டிற்கான பொதுமாறுதல் / பணிநிரவல்கலந்தாய்வுகள் 08.05.2023 முதல் 12.06.2023 வரையிலான தேதிகளிலும் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது என்றும், 2024-2025 ஆம் ஆண்டிற்கான, பொதுமாறுதல் கலந்தாய்வு தொடர்பான பணிகளை மே 2024 மாதத்தில் தொடங்கி நடத்தி முடிக்கப்படவேண்டியுள்ளது என்றும், பொதுமாறுதல் / பணிநிரவல் கலந்தாய்வு தொடர்பாக கீழ்க்காணும் பணிகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது என பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

2. இந்நிலையில், மக்களவைப் பொதுத் தேர்தல் 2024 தொடர்பாக தேர்தல் நன்னடத்தை விதிகள் 16.03.2024 முதல் அமலுக்கு வந்துள்ளது. மாநிலத்தில் மக்களவைத் தேர்தல் முதற்கட்டமாக 19.04.2024ல் முடிவுற்றிருப்பினும், ஜுன் 2024 முதல் வாரம் வரை தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளது. மேலும், ஊராட்சிஒன்றிய / நகராட்சி, தொடக்க / நடுநிலைப்பள்ளிகள் மற்றும் அரசு / நகராட்சி, உயர் / மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து வகை ஆசிரியர்களுக்கான பொதுமாறுதல், பணிநிரவல் குறித்தானபணிகள் அனைத்தையும் 2024 -2025 ஆம் கல்வியாண்டில் பள்ளிகள் திறப்பதற்கு முன் பாகமே 2024 மாதம்தொடங்கிநடத்தி முடிப்பது, மாணவர்களுக்கு கற்றல் – கற்பித்தல் பணிகளில் எவ்வித இடையூறுகள் இன்றி, பள்ளி திறக்கும் நாள் முதலே காலதாமதமின்றி கற்றல் – கற்பித்தல் பணிகளை தொடர ஏதுவாக அமையும் என்றும், அவ்வாறே மாறுதல் பெறும் ஆசிரியர்கள் தங்களது குழந்தைகளை, தங்களது புதிய பணியிடத்திற்கு அருகாமைபள்ளிகளில் சேர்ப்பது உள்ளிட்டவற்றிற்கும் உகந்ததாக இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. மேலும், தற்போது மக்களவைத் தேர்தல் 2024 நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளதால், 2024-2025ஆம் ஆண்டிற்கான பொதுமாறுதல் / பணிநிரவல் கலந்தாய்வு, தொடர்பான ஆயத்தப்பணிகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் பின்வருமாறு 13.05.2024 முதல் 30.06.2024 வரை தொடர்ந்து நடத்திட அனுமதியை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார். மேலும், கலந்தாய்வில், கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்களுக்கு தேர்தல் நன்னடத்தை விதிகள் முடிவுக்கு வந்த பின்னர், மாறுதல் / பணிநிரவல் ஆணைகளை வழங்கி, புதிய பணியிடத்தில் பணியேற்கும் வகையில் பணிவிடுவிப்பு செய்ய உரிய அனுமதி வழங்குமாறு அரசைக் கேட்டுகொண்டுள்ளார்.

www.Padasalai.Net

4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவை ஏற்று, மேலே 5 மற்றும் 6ல் படிக்கப்பட்ட அரசாணைகளில் முறையே பத்தி 3 மற்றும் பத்தி 5இல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பின்பற்றி, இக்கடிதத்தின் இணைப்பில் கண்டுள்ளவாறு 2024-2025ஆம் ஆண்டிற்கான பொது மாறுதல் / பணி நிரவல் கலந்தாய்வு தொடர்பான ஆயத்தப் பணிகள் உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் 13.05.2024 முதல் 30.06.2024 வரை தொடர்ந்து நடத்திடவும், மேலும் பொது மாறுதல் / பணிநிரவல் கலந்தாய்வு பணிகளை மேற்கொண்டு மாறுதல் / பணிநிரவல் கலந்தாய்வில் கலந்து கொள்ளும் ஆசிரியர்கள் / தலைமை ஆசிரியர்களுக்கு 2024ஆம் ஆண்டு மக்களவைத் தேர்தல் நடத்தை விதிகள் விலக்கிக் கொள்ளப்பட்டவுடன் பணி விடுவிப்பு செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

29/4/24

(அரசு சார்புச் செயலாளர்)

அரசு செயலாளருக்காக

www.Padasalai.Net

**இணைப்பு**

(அரசுக் கடித எண்.3835/பக.5(1)/2024-1 நாள் 29.04.2024)

**2024-25ம் கல்வியாண்டிற்கு பணி நிரவல் மற்றும் பொது மாறுதல் கலந்தாய்வு**

உத்தேச கலந்தாய்வு கால அட்டவணை (தொடக்கக் கல்வி & பள்ளிக் கல்வி)

**கலந்தாய்வு நடைபெறும் நேரம் : முற்பகல் 09.30 முதல் பிற்பகல் 06.00 வரை**

| வ. எண் | இயக்ககம் | பதவி | கலந்தாய்வு நடைபெறும் நாள் & கிழமை |
|---|---|---|---|
| 1 | DSE & DEE | பொது மாறுதலுக்கான விண்ணப்பங்களைத் தலைமை ஆசிரியர்கள் / ஆசிரியர்கள் கல்வி மேலாண்மை தகவல் முகமை (EMIS) வாயிலாகப் பதிவேற்றம் செய்தல் | 13.05.2024 06.00AM முதல் 17.05.2024 06.00PM வரை |
| 2 | DSE & DEE | பதிவேற்றம் செய்யப்பட்ட அனைத்து வகை ஆசிரியர்களின் மாறுதல் கோரும் விண்ணப்பங்களின் முன்னுரிமைப் பட்டியல் (Seniority List) மற்றும் காலிப்பணியிட விவரங்கள் (Vacancy List) வெளியிடுதல் | 20.05.2024 10.00 AM திங்கள் |
| 3 | DSE & DEE | முன்னுரிமைப் பட்டியலில் திருத்தம் மற்றும் முறையீடுகள் ஏதும் இருப்பின் (Claims and objections) | 21.05.2024 05.00PM செவ்வாய் |
| 4 | DSE & DEE | மாறுதல் விண்ணப்பங்களின் இறுதி முன்னுரிமைப் பட்டியல் வெளியிடுதல் (Release off seniority list ) Release of Vacancy List Final) | 23.05.2024 வியாழன் |
| 5 | DEE | மலைச் சுழற்சி மாறுதல் கலந்தாய்வு | 24.05.2024 வெள்ளி |
| 6 | DSE | அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 25.05.2024 சனி |
| 7 | DSE | அரசு / நகராட்சி மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 27.05.2024 திங்கள் |
| 8 | DEE | இடைநிலை ஆசிரியர்கள் பணிநிரவல் கலந்தாய்வு | 28.05.2024 செவ்வாய் |
| 9 | DSE | அரசு/நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 29.05.2024 புதன் |
| 10 | DSE | அரசு/நகராட்சி உயர்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 30.05.2024 வியாழன் |

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 11 | DEE | நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (ஒன்றியத்திற்குள்) | 31.05.2024 வெள்ளி |
| 12 | DEE | நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (கல்வி மாவட்டத்திற்குள்) | 01.06.2024 சனி (முற்பகல்) |
| 13 | DEE | நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள்) | 01.06.2024 சனி (பிற்பகல்) |
| 14 | DEE | நடுநிலைப் பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 03.06.2024 திங்கள் |
| 15 | DEE | பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (ஒன்றியத்திற்குள்) | 06.06.2024 வியாழன் |
| 16 | DEE | பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (கல்வி மாவட்டத்திற்குள்) | 07.06.2024 வெள்ளி (முற்பகல்) |
| 17 | DEE | பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள்) | 07.06.2024 வெள்ளி (பிற்பகல்) |
| 18 | DEE | பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 08.06.2024 சனி |
| 19 | DEE | தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (ஒன்றியத்திற்குள்) | 10.06.2024 திங்கள் |
| 20 | DEE | தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (கல்வி மாவட்டத்திற்குள்) | 11.06.2024 செவ்வாய் (முற்பகல்) |
| 21 | DEE | தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள்) | 11.06.2024 செவ்வாய் (பிற்பகல்) |
| 22 | DEE | தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு ( மாவட்டம் விட்டு மாவட்டம்) | 12.06.2024 புதன் |
| 23 | DEE | இடைநிலை ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (ஒன்றியத்திற்குள்) | 13.06.2024 வியாழன் |
| 24 | DEE | இடைநிலை ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (கல்வி மாவட்டத்திற்குள்) | 14.06.2024 வெள்ளி (முற்பகல்) |
| 25 | DEE | இடைநிலை ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (வருவாய் மாவட்டத்திற்குள்) | 14.06.2024 வெள்ளி (பிற்பகல்) |
| 26 | DEE | இடைநிலை ஆசிரியர்கள் மாறுதல் கலந்தாய்வு (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 15.06.2024 சனி |

www.Padasalai.Net

| | | | |
|---|---|---|---|
| 27 | DSE | அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் முதுகலை ஆசிரியர்கள் 01.08.2023 நிலவரப்படி ஆசிரியருடன் உபரி எனக் கண்டறியப்பட்டவர்களை பணிநிரவல் (PG Deployment All subjects) | 18.06.2024 செவ்வாய் |
| 28 | DSE | அரசு/நகராட்சி முதுகலை ஆசிரியர்கள்/கணினி ஆசிரியர்கள் நிலை-1/உடற்கல்வி இயக்குநர் நிலை-1/ தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Agriculture) மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 19.06.2024 புதன் |
| 29 | DSE | அரசு/நகராட்சி முதுகலை ஆசிரியர்கள்/கணினி ஆசிரியர்கள் நிலை-1/ உடற்கல்வி இயக்குநர் நிலை-1/ தொழிற்கல்வி ஆசிரியர்கள் (Agriculture) மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 20.06.2024 முதல் 22.06.2024 வரை வியாழன், வெள்ளி மற்றும் சனி |
| 30 | DSE | அரசு/நகராட்சிப் உயர்/மேல்நிலைப் பள்ளியில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் 01.08.2023 நிலவரப்படி ஆசிரியருடன் உபரி எனக் கண்டறியப்பட்டவர்களை பணிநிரவல் (BT Deployment-Tamil, English, Maths,Science, Social) வருவாய் மாவட்டத்திற்குள் | 24.06.2024 திங்கள் |
| 31 | DSE | அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் கலையாசிரியர்கள், இசை ஆசிரியர்கள், தையல் ஆசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர்கள் மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 25.06.2024 செவ்வாய் |
| 32 | DSE | அரசு/நகராட்சி உயர்/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் கலையாசிரியர்கள், இசை ஆசிரியர்கள், தையல் ஆசிரியர்கள் / இடைநிலை ஆசிரியர்கள் மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 26.06.2024 புதன் |
| 33 | DSE | அரசு/நகராட்சிப் பள்ளிபட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் (வருவாய் மாவட்டத்திற்குள்) | 27.06.2024 வியாழன் |
| 34 | DSE | அரசு/நகராட்சிப் பள்ளிப் பட்டதாரி ஆசிரியர்கள் மாறுதல் (மாவட்டம் விட்டு மாவட்டம்) | 28.06.2024 முதல் 30.6.2024 வரை |

ஜெ.குமரகுருபரன்
அரசு செயலாளர்

/உண்மை நகல்/

3/4/24
அரசு சார்புச் செயலாளர்